[வலைப்பின்னல் மாற்று முறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்*

---

[*1999, ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 8.25** **தபாற் செலவு : ரூபா 3.50**

## *1999ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம்*

[*1999 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஒ. 23/96*

*1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*கருக்கப்பெயா.*

***1.*** *இச்சட்டம் 1999 ஆம் ஆண்டி 24 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995 ஆம் ஆண்டி 16 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-*

*"டீசல் மோட்டார் வாகனத்திற்கான ஆண்டு விதிப்பனவு*

*2. டீசல் மோட்டார் வாகனம் ஒவ்வொன் றிற்கும் முறையே 1995 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்றும் 1996 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்றும் தொடங்கும் ஆண்டுகளுக்கு பத்தாயிரம் ரூபாவுக்குச் சமமான பணத் தொகையொன்றும் 1997 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண் டிற்கும் ஐயாயிரம் ரூபாவுக்குச் சமமான பணத் தொகையொன்றுக்குமான டீசல் மோட்டார் வாகன விதிப்பனவொன்று (இப்பாகத்தின் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அறவிடப்ப டுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற் பாலதான விதிப்பனவு இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் டீசல் மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரால் செலுத்தப்படுதல் வேண்டும்."*

H - 022545

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு "(ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றைத் தவிர)" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது வகன் வாகனமொன்றைத் தவிர)" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, "ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும் (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்கு மோட்டார் வாகனமொன்றை அல்லது வகன் வாகனமொன்றைத் தவிர)" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, "ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும் என்னும்" சொற்களுக்குப் பதிலாக, "(வகன் வாகனம் ஒன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, "ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் அதனுடன் சேர்க்கப்படும் ஏதேனும் தண்டப்பணத்தையும் உள்ளடக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவையும் உள்ளடக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உட்புகுத்துதல்.

**7.** ஏழாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 7அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"பாவனை செய்யாதவருக்கு டீசல் மோட்டார் வாகன விதிப்பன விலிருந்து விலக்களிப்பு

7.அ ஏதேனும் மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவர் அத்தகைய வாகனம் ஆறு மாதங்களை விஞ்சும் ஒரு காலப்பகுதிக்கு பாவனை செய்யப்படவில்லை என மோட்டார் வாகனச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின்கீழ் அல்லது,

மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பிலான மாகாண சபையொன்றின் ஏதேனும் நியதிச் சட்டத்திலுள்ள ஏதேனும் தோதான ஏற்பாட்டின்கீழ் அறிவித்தலொன்றைக் கொடுத்துள்ளாரென ஆணையாளர் திருப்திப்படுமிடத்து அவர், ஏதேனும் ஆண்டிற்கு அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் செலுத்தப்படற்பாலதான டீசல் மோட்டார் வாகன விதிப்பனவின் முழுத் தொகையின் அல்லது ஏதேனும் பாகத்தினது கொடுப்பனவிலிருந்து மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கு விலக்களிக்கலாம்."

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 8 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**8.** எட்டாம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 8 அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரர் அரசாக, அல்லது உள்ளூரதிகார சபையாக இருக்குமிடத்து.*

8அ. எட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் விடயத்திற்கேற்ப அரசாக அல்லது ஓர் உள்ளூரதிகார சபையாக இருக்குமிடத்து, அத்தகைய பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் விதிப்பனவை எவரேனும் காப்பீட்டாளருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் 8 ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (2), (3), (4),(5), (6) என்பவற்றினதும் 9 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள் அத்தகைய கொடுப்பனவிற்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரர் விதிப்பனவின் கொடுப்பனவை எண்பித்தல்.*

(1) குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒவ்வொன்றினதும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், ஏதேனும் ஆண்டிற்கு அத்தகைய மோட்டார் வாகனம் தொடர்பில் அவர் காப்புறுதிப் பத்திரமொன்று வழங்கப்படுவதற்கு அல்லது புதுப்பிக்கப்படுவதற்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் அந்த குறித்துரைக்கப்பட்ட

மோட்டார் வாகனம் தொடர்பில் அவ்வாண்டிற்கும் முந்திய ஆண்டிற்குமான விதிப்பனவின் கொடுப்பனவிற்கான எண்பிப்பை காப்பீட்டாளருக்கு முன்வைத்தல் வேண்டும்.

*(2)* பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் *(1)* ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விதிப்பனவின் கொடுப்பனவிற்கான எண்பிப்பைக் காண்பிக்கத் தவறுமிடத்து, காப்பீட்டாளர் அத்தகைய செலுத்தாமை பற்றி ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***10.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது –

*(1)* அப்பிரிவின் *(3)* ஆம் உட்பிரிவில் "தவணை தவறுகையிலுள்ள விதிப்பனவைச் செலுத்துமாறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தவணை தவறுகையிலுள்ள விதிப்பனனையும் அதற்குச் சேர்க்கப்பட்ட ஏதேனும் தண்டப் பணத்தையும் செலுத்துமாறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

*(2)* அப்பிரிவின் *(4)* ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்

"*(4)* தவணை தவறிய ஒருவர்

*(அ)* குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரரொருவாரக இருக்குமிடத்து, அறிவித்தல் ஒன்று அவருக்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட்டதாயின் அல்லது அவ் வாகனத்தின் பதிவுச்சான்றிதழில் தரப்பட்டுள்ள முகவரியில் அவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதாயின்; அல்லது.

(ஆ) காப்பீட்டாளரொருவராகஇருக்குமிடத்து, அத்தகைய அறிவித்தல் அவருக்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட்டதாயின் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது பிரதான தொழிலிடத்தில் அவருக்கு முகவரி யிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப் பட்டதாயின்.

அத்தகைய அறிவித்தல் அவருக்கு முறையாக, அனுப் பப்பட்டுள்ளதாக்க கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அறிவித்தலொன்று தவணை தவறிய ஒருவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட விடயத்தில், அறிவித்தல், சாதாரணமாக அவருக்கு ஒப்படைக்கப்பட்டி ருக்கக்கூடிய திகதியன்று தவணை தவறியவரால் பெறப்பட்டிருப்பதாகக் கருப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ. 10ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**11.** பத்தாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ, 10ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

தண்டப்பணத்தை விட்டுவிடுவதற்கு அல்லது குறைப் பதற்கு ஆணை யாளருக்குள்ள தத்துவம்.

10அ. விதிப்பனவு இயைபான திகதிக்கு முன்னர் செலுத்தப்படத் தவறியமைக்கு பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ் நிலைகளே பாணம் எனவும் அத்தகைய தண்டப்பணத்தை விட்டுவிடுதல் அல்லது குறைத்தல் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதும் ஒப்புரவானதுமாகும் எனவும் ஆணையாளர் திருப்திப்படின், 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவரால் செலுத் தப்படற்பாலதான ஏதேனும் தண்டப் பணத்தை ஆணையாளர் விட்டுவிடலாம் அல்லது குறைக்கலாம்.

செலுத்தப்பட்ட தண்டப்பணத்தை எதிரீடு செய்வதற்கு அல்லது மீளளிப் பதற்கு ஆணையாள ருக்குள்ள தத்துவம்.

10 ஆ. மோட்டார் வாகனமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் , தவணை தவறுகையில் உள்ளதாகக் கருதப்பட்ட விதிப்பனவு ஒன்று தொடர்பில் தண்டப் பணமொன்றைச் செலுத்தியுள்ளவிடத்து விதிப்பனவு இயைபான திகதிக்கு முன்னர் செலுத்தப்படத் தவறியமைக்கு, பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ் நிலைகளே காரணம் எனவும் அத்தகைய தண்டப்பணத்தை எதிரீடு செய்தல் அல்லது மீளளித்தல் விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதும் ஒப்புரவானதுமாகும் எனவும் ஆணையாளர் திருப்திப்படின், ஆணையாளர்–

(அ) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் செலுத்தப்பட்ட தண்டப்பணத்தை ஏதேனும் அடுத்துறும் ஆண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுக்கெதிராக எதிரீடு செய்யலாம்.

(ஆ) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரரால் செலுத்தப்பட்ட தண்டப்பணத்தை மீளளிக்கலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது

11. விதிப்பனவினதும் அதனுடன் சேர்க்கப் பட்ட ஏதேனும் தண்டத்தினதும் தொகை 10 ஆம் பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அறிவித்த லொன்றில் குறிப்பீடு செய்யப்பட்ட திகதி முடிவடைவதற்கு முன்னர் செலுத்தப்பட்டிராத விடத்து, ஆணையாளர், அத்தகைய விதிப்பன வினதும், அத்துடன் அதனுடன் சேர்க்கப்பட்ட ஏதேனும் தண்டப்பணத்தினதும் தொகை.

தவணை தவறியவரின் பெயர், கடைசியாக அறியப்பட்ட வதிவிடம் என்பன அடங்கிய சான்றிதழொன்றை, அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்ட நீதிவானொருவருக்கு வழங்கலாம், அதன்மீது நீதிவான், விதிப்பனவையும் அத்துடன் அதனுடன் சேர்க்கப்பட்ட ஏதேனும் தண்டப் பணத்தையும் அறவிடுவதற்கு அத்தகைய தவணை தவறியவருக்கெதிராக ஏன் மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுவதற்கு அவரை தமது முன்னிலைக்கு அழைப்பித்தல் வேண்டும் என்பதுடன் போதிய காரணம் காட்டுவதற்குடு தவறப்படுமிடத்து, தவணை தவறுகையிலுள்ள ஏதேனும் விதிப்பனவும் அத்துடன் அதனுடன் சேர்க்கப்பட்ட ஏதேனும் தண்டப்பணமும், தண்டப்பணத்தால் மாத்திரம் தண்டிக்கப்படற் பாலதான அல்லது மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற்பாலதான அல்லாத தவறொன்றுக்கு அத்தகைய தவணைதவறியவர் மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பொன்றினால் விதிக்கப்படும் தண்டப்பணமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும் அத்துடன் அதன் மீது அத்தகைய தவறொன்றுக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணமொன்றின் கொடுப்பனவில் தவணைதவறுகை தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (அ), (ஈ), (ஐ) என்னும் பந்திகளைத் தவிர) ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளால் அத்தகைய தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்ட நேரத்தில் அவரால் செய்திருக்கக்கூடிய ஏதெனும் பணிப்பையும் செய்யலாம்"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு "அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் இறுதி வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் 1996, செத்தெம்பர் 5 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளருக்கு விதிப்பனவைச் செலுத்தினால், அவர் எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகி விட்டார் எனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய விதிப்பனவு எதுவும் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய விதிப்பனவு, அத்தகைய திகதி முடிவடைந்த பின்னர் தவணை தவறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய திகதியிலிருந்து, இச்சட்டத்தின் கருத்தெல்லைகளுக்குள் தவணை தவறிய ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "மோட்டார் சைக்கிள்" என்பதிலிருந்து "பொருள் உண்டு" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கஞ்செய்து அவற்றிற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"வலுவற்றோர் வண்டி", "மோட்டார் பிணியாளர் வண்டி", "மோட்டார் சைக்கிள்" ,"மோட்டார் பிரேத வண்டி", "மோட்டார் ட்ரை சைக்கிள்"; "பஸ் வண்டிகள்","தனியார் கோச் வண்டிகள்" என்பன மோட்டார் வாகனச் சட்டத்தில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அவற்றிற்குரிய பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்";

(2) "மோட்டார் வாகனம்" என்பதன் வரைவிலக்கணத்தில் "லொறி" என்பதிலிருந்து அவ்வரைவிலக்கணத்தின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"லொறி, பஸ் வண்டி, தனியார் கோச் வண்டி, உழவு இயந்திரம், கை உழவு இயந்திரம், இழுவை வண்டி அல்லாததும் (சாரதி உட்பட) பத்துக்கு மேற்படாத ஆட்களையும் அவர்களது பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்ட அல்லது இசைவாக் கப்பட்ட ஏதேனும் வாகனம் எனப் பொருள்படும்"

*(3)* “ஓரளவு ஆடம்பரமான இரட்டை நோக்கு மோட்டார் வாகனம்” என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் ;

“ஓரளவு ஆடம்பரமான இரட்டை நோக்கு மோட்டார் வாகனம்” என்பது இரட்டை நோக்கு மோட்டார் வாகனம் ஒன்றாகப் பதிவுசெய்யப்பட்ட ஓர் ஆடம்பரமான மோட்டார் வாகமை் அல்லது ஓரளவு ஆடம்பரமான மோட்டார் வாகனம் என்று பொருள்படும் ;

*(4)* “குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகளம்” என்தன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம்:-

“வகன் வாகனம்” என்பது தனி அலகொன்றாக வடிவமைக்கப்படட்டு, பிரயாணிகளை அல்லது பண்டங்களை அல்லது பிரயாணிகளையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லும் நோக்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் என்று பொருள்படும்”

*கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.*

**16.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் 1997, ஏப்பிறல் 1 ஆம் திசதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17.** இச்சட்டத்தின், சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*